# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:73** **தேதி:-02.11.2015**

## கேடர் பெயர் மாற்றமும் சில மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

ஊழியர் கேடர்களின் பெயர் மாற்ற பிரச்சனை நீண்ட நாட்களாக இழுத்தடிக்கப்பட்டு வருவதால் ஊழியர்கள் மத்தியில் ஒரு வெறுப்பை ஏற்படுத்தி வருகிறது. நீண்ட நெடிய தாமதத்திற்கு பின் 28.07.2015 அன்று நிர்வாகம் நியமித்த கமிட்டியில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாடு ஏற்பட்டு 3 மாதங்கள் கழிந்த பின்னரும் அதற்கான உத்தரவு வெளிவரவில்லை. TTA கேடர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட புதிய பெயரை MANAGEMENT COMMITTEE ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டு விட்டதாக தெரிகிறது. அனைத்து மத்திய அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் நேரடி நியமன தேர்வுகளில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கேடர்களுக்கு JUNIOR ENGINEER என்கின்ற பெயர் வழங்கப்பப்பட்டுள்ளது. அந்த JUNIOR ENGINEER கேடர்கள் அதிகாரிகளின் கேடர்கள் அல்ல. ரயில்வே, தபால், மத்திய பொதுப்பணித்துறை உள்ளிட்ட அரசுத்துறைகளில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கேடர்களுக்கு JUNIOR ENGINEER என்கின்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன், IIT, AIIMS, NIT, ELECTRICITY SERVICE COMMISSION உள்ளிட்ட இதர நிறுவனங்களும், 3 ஆண்டு பட்டயப்படிப்பு தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கேடர்களுக்கு JUNIOR ENGINEER என்கின்ற பெயரை வழங்கியுள்ளன.

இவற்றிற்கான சான்றுகளுடன் நமது மத்திய சங்கம், BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, கேடர்களுக்கான பெயர் மாற்றத்தை விரைவில் MANAGEMENT COMMITTயின் ஒப்புதலை பெற்று அமுல் படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

**JAO இலாகா தேர்வு விதிகளில் மாற்றம்**:- நமது மத்திய சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாக, JAO இலாகா தேர்வு எழுத சேவை தகுதி பத்தாண்டு என இருந்ததை ஐந்து ஆண்டுகளாக குறைத்து கார்ப்பரேட் அலுவலகம் JAO தேர்வு விதிகளில் மாற்றத்தை உருவாக்கி உத்தரவை வெளியிட்டுள்ளது.

**பயிற்சி கேந்திரத்தின் PGMஆக M.S.S.ராவ் நியமனம்:-** ‘கட்டாய காத்திருப்பு’ பட்டியலில் கார்ப்பரேட் அலுவலகத்தால் வைக்கப்பட்டிருந்த M.S.S.ராவ் தற்போது திருவனந்தபுரம் பயிற்சி கேந்திரத்தின் PGMஆக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த உத்தரவு 30.10.2015 முதல் அமுலுக்கு வந்துள்ளது. BSNL கார்ப்பரேட் அலுவலகம் தாக்கல் செய்திருந்த SLP மீது உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. M.S.S.ராவ் அவர்களின் புதிய பணி சிறக்க BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**